செ.வெ.எண்: 153

<u>அரசு செய்தி வெளியீடு நாள்: **15/02/2011**</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் பால் கொள்முதல் விலையை மீண்டும் உயர்த்துவது குறித்து தமிழ் நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கத்தலைவர் திரு.கே.ஏ.செங்கோட்டுவேல், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு கே. முகமது அலி மற்றும் கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் நல சங்க காப்பாளர் திரு எஸ்.ஆர்.இராஜகோபால் மற்றும் நிர்வாகிகளுடன் மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் இன்று 15.02.2011 மாலை 4 மணிக்கு தலைமைச் செயலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினார்.இந்த பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் தலைமைச்செயலர், நிதித்துறை செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலர், பால்வளத் துறை ஆணையர்/ஆவின் நிர்வாக இயக்குநர், ஆவின் இணைநிர்வாக இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் பசும்பால் கொள்முதல் விலை ஏற்கனவே லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.10 உயர்த்தி 5.1.2011 முதல் ரூ.16.64 என்று வழங்கப்பட்டு வருவதை மேலும் உயர்த்தி லிட்டர் ஒன்றுக்கு ரூ.18.00 ஆகவும், எருமைப் பால் கொள்முதல் விலை ஏற்கனவே லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.20 உயர்த்தி 5.1.11 முதல் ரூ.25.20 என்று வழங்கப்பட்டு வருவதை மேலும் உயர்த்தி லிட்டர்

ஒன்றுக்கு ரூ.26.00 ஆகவும் பால் உற்பத்தியாளர்களுக்கு உயர்த்திக் கொடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டு தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்த பால் கொள்முதல் விலை உயர்வு வரும் 16.02.2011 ,அன்று முதல் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்படுகிறது. தற்போது பால் கொள்முதல் விலை மேலும் உயர்வு செய்து அளிக்கப்பட்ட நிலையிலும் நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு ஆவின் பால் விற்பனை விலையில் எந்தவிதமான உயர்வும் செய்யப்படாது என அரசு முடிவு செய்துள்ளது

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9